سُوْرَةُ النَّبَاِ مَكِّيَّةٌ وَّهِيَ اَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○

عَمَّ يَتَسَآءَلُوْنَ ۚ ١ عَنِ النَّبَاِ الْعَظِيْمِ ۙ ٢ الَّذِیْ هُمْ
فِيْهِ مُخْتَلِفُوْنَ ؕ ٣ كَلَّا سَيَعْلَمُوْنَ ۙ ٤ ثُمَّ كَلَّا سَيَعْلَمُوْنَ ٥ اَلَمْ
نَجْعَلِ الْاَرْضَ مِهٰدًا ۙ ٦ وَّالْجِبَالَ اَوْتَادًا ۙ ٧ وَّخَلَقْنٰكُمْ
اَزْوَاجًا ۙ ٨ وَّجَعَلْنَا نَوْمَكُمْ سُبَاتًا ۙ ٩ وَّجَعَلْنَا الَّيْلَ لِبَاسًا ۙ ١٠
وَّجَعَلْنَا النَّهَارَ مَعَاشًا ۪ ١١ وَبَنَيْنَا فَوْقَكُمْ سَبْعًا شِدَادًا ۙ ١٢ وَّ
جَعَلْنَا سِرَاجًا وَّهَّاجًا ۙ ١٣ وَّاَنْزَلْنَا مِنَ الْمُعْصِرٰتِ مَآءً
ثَجَّاجًا ۙ ١٤ لِّنُخْرِجَ بِهٖ حَبًّا وَّنَبَاتًا ۙ ١٥ وَّجَنّٰتٍ اَلْفَافًا ؕ ١٦ اِنَّ
يَوْمَ الْفَصْلِ كَانَ مِيْقَاتًا ۙ ١٧ يَّوْمَ يُنْفَخُ فِی الصُّوْرِ
فَتَاْتُوْنَ اَفْوَاجًا ۙ ١٨ وَّفُتِحَتِ السَّمَآءُ فَكَانَتْ اَبْوَابًا ۙ ١٩ وَّ
سُيِّرَتِ الْجِبَالُ فَكَانَتْ سَرَابًا ؕ ٢٠ اِنَّ جَهَنَّمَ كَانَتْ
مِرْصَادًا ۙ ٢١ لِّلطّٰغِيْنَ مَاٰبًا ۙ ٢٢ لّٰبِثِيْنَ فِيْهَآ اَحْقَابًا ۚ ٢٣
لَا يَذُوْقُوْنَ فِيْهَا بَرْدًا وَّلَا شَرَابًا ۙ ٢٤ اِلَّا حَمِيْمًا وَّغَسَّاقًا ۙ ٢٥
جَزَآءً وِّفَاقًا ؕ ٢٦ اِنَّهُمْ كَانُوْا لَا يَرْجُوْنَ حِسَابًا ۙ ٢٧

அத்தியாயம் : 78

## அந்நபஉ _ செய்தி

வசனங்கள் : 40 மக்கீ ருகூஉகள் : 2

**அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் (ஓதுகிறேன்).**

1. (நபியே!) எதைப்பற்றி அவர்கள் ஒருவொருக்கொருவர் கேட்டுக் கொள்கின்றனர்?
2. மகத்தான அச் செய்தியைப்பற்றி,
3. அ(ம்மகத்தான செய்தியான)து எத்தகையதென்றால், அவர்கள் அதில் (தான்) கருத்து வேறுபாடு கொண்டுள்ளனர்.
4. அவ்வாறல்ல! (அல்லாஹ், காஃபிர்களை என்ன செய்வான் என்பதை) அவர்கள் நன்கறிந்து கொள்வார்கள்.
5. பின்னர், அவ்வாறல்ல! (விசுவாசிகள் அல்லாஹ்வை ஏற்றுக்கொண்டதன் பலனை) அறிந்து கொள்வார்கள்.
6. பூமியை, நாம் (உங்களுக்கு) விரிப்பாக ஆக்கவில்லையா?
7. மலைகளையும் முளைகளாக (நாம் அமைக்கவில்லையா?)
8. இன்னும் உங்களை (ஆண், பெண் கொண்ட) ஜோடிகளாக நாம் படைத்தோம்.
9. நாம் உங்களுடைய தூக்கத்தை (உங்களுக்கு) இளைப்பாறுதலாகவும் ஆக்கினோம்.
10. நாம் இரவை (உங்களுக்கு) ஆடையாகவும் ஆக்கினோம்.
11. நாம் பகலை வாழ்க்கைக்குரிய(வற்றைத் தேடிக்கொள்ளும்) நேரமாக ஆக்கினோம்.
12. உங்களுக்கு மேல் உறுதியான (வானங்கள்) ஏழினை நாமே உண்டாக்கினோம்.
13. (வெப்பமும் ஒளியும் கலந்த) பிரகாசிக்கும் ஒரு விளக்கையும் (சூரியனை) ஆக்கினோம்.
14. கார் மேகங்களிலிருந்து அதிகமாகப் பொழியும் (மழை) நீரையும் இறக்கிவைத்தோம்.
15. அதனைக் கொண்டு தானியத்தையும், தாவரத்தையும் நாம் வெளிப் படுத்துவதற்காக_
16. அடர்ந்த மரங்களுல்ல சோலைகளையும் (வெளிப்படுத்துவதற்காக)_
17. நிச்சயமாக, தீர்ப்புநாள் நேரம் குறிக்கப்பட்டதாக இருக்கிறது.
18. ஸூர் (குழல்) ஊதப்படும் நாளன்று நீங்கள் கூட்டம்கூட்டமாக (கேள்வி கணக்கு நடக்கும் திறந்த வெளிக்கு) வருவீர்கள்.
19. வானமும் திறக்கப்பட்டு, பின்னர் பல வாசல்களாக அது ஆகிவிடும்.
20. மலைகளும் (இடம்) பெயர்க்கப்பட்டு கானல் நீராகிவிடும்.
21. நிச்சயமாக நரகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இடமாக உள்ளது_
22. வரம்பு மீறியவர்களுக்குத் தங்குமிடமாக (ஆவதற்காக)_
23. அதில் அவர்கள் பல யுகங்கள் தங்குபவர்களாக இருக்கும் நிலையில்,
24. அதில் அவர்கள் குளிர்ச்சியையோ, குடிப்பையோ சுவைக்கமாட்டார்கள்.
25. முடிவுறக்காய்ச்சப்பட்ட (கொதி) நீரையும், (நரகவாசிகளின் உடலிலிருந்து வடிந்து கொண்டிருக்கும்) சீழையும் தவிர,
26. (இது அவர்கள் செயலுக்கு) ஒத்த கூலியாக.
27. நிச்சயமாக அவர்கள் (மறுமையின் கேள்வி) கணக்கை நம்பாதவர்களாக இருந்தனர்.

وَّكَذَّبُوْا بِاٰيٰتِنَا كِذَّابًا ﴿٢٨﴾ وَكُلَّ شَیْءٍ اَحْصَیْنٰهُ كِتٰبًا ﴿٢٩﴾

فَذُوْقُوْا فَلَنْ نَّزِیْدَكُمْ اِلَّا عَذَابًا ﴿٣٠﴾ اِنَّ لِلْمُتَّقِیْنَ مَفَازًا ﴿٣١﴾ ع ١

حَدَآئِقَ وَاَعْنَابًا ﴿٣٢﴾ وَّكَوَاعِبَ اَتْرَابًا ﴿٣٣﴾ وَّكَاْسًا دِهَاقًا ﴿٣٤﴾

لَا یَسْمَعُوْنَ فِیْهَا لَغْوًا وَّلَا كِذّٰبًا ﴿٣٥﴾ جَزَآءً مِّنْ رَّبِّكَ عَطَآءً

حِسَابًا ﴿٣٦﴾ رَّبِّ السَّمٰوٰتِ وَالْاَرْضِ وَمَا بَیْنَهُمَا الرَّحْمٰنِ

لَا یَمْلِكُوْنَ مِنْهُ خِطَابًا ﴿٣٧﴾ یَوْمَ یَقُوْمُ الرُّوْحُ وَالْمَلٰٓئِكَةُ

صَفًّا ۙ لَّا یَتَكَلَّمُوْنَ اِلَّا مَنْ اَذِنَ لَهُ الرَّحْمٰنُ وَقَالَ صَوَابًا ﴿٣٨﴾

ذٰلِكَ الْیَوْمُ الْحَقُّ ۚ فَمَنْ شَآءَ اتَّخَذَ اِلٰى رَبِّهٖ مَاٰبًا ﴿٣٩﴾ اِنَّآ

اَنْذَرْنٰكُمْ عَذَابًا قَرِیْبًا ۚ یَّوْمَ یَنْظُرُ الْمَرْءُ مَا قَدَّمَتْ یَدٰهُ

وَیَقُوْلُ الْكٰفِرُ یٰلَیْتَنِیْ كُنْتُ تُرٰبًا ﴿٤٠﴾ ع ٢ ٢

## سُوْرَةُ النّٰزِعٰتِ مَكِّيَّةٌ وَّهِيَ سِتٌّ وَّاَرْبَعُوْنَ اٰيَةً وَّفِيْهَا رُكُوْعَانِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِیْمِ

وَالنّٰزِعٰتِ غَرْقًا ﴿١﴾ وَّالنّٰشِطٰتِ نَشْطًا ﴿٢﴾ وَّالسّٰبِحٰتِ سَبْحًا ﴿٣﴾

فَالسّٰبِقٰتِ سَبْقًا ﴿٤﴾ فَالْمُدَبِّرٰتِ اَمْرًا ﴿٥﴾ یَوْمَ تَرْجُفُ وقف لازم

الرَّاجِفَةُ ﴿٦﴾ تَتْبَعُهَا الرَّادِفَةُ ﴿٧﴾ قُلُوْبٌ یَّوْمَئِذٍ وَّاجِفَةٌ ﴿٨﴾

28. மேலும், நம்முடைய வசனங்களை மிக்க அதிகமாக (முற்றாக) பொய்யாக்கிக் கொண்டிருந்தனர்.

29. ஒவ்வொரு பொருளையும், (அது பற்றி நன்கறிந்து) அதை நாம் பதிவுப் புத்தகத்தில் கணக்கிட்டு(எழுதி)வைத்திருக்கிறோம்.

30. "ஆகவே சுவையுங்கள்; வேதனையைத் தவிர (வேறெதனையும்) உங்களுக்கு நாம் அதிகப்படுத்தவே மாட்டோம்"(என்று கூறப்படும்).

31. நிச்சயமாக பயபக்தியுடையோருக்கு (நரகிலிருந்து விடுபட்டு சுவனம் செல்லும்) வெற்றி உண்டு.

32 தோட்டங்களும், திராட்சைகளும் (உண்டு).

33. (மனைவிகளாக)மார்பகங்கள் உயர்ந்த சமவயதுடைய கன்னிகைகளும் (இருப்பர்).

34. (மது) பானங்கள் நிறைந்த கிண்ணங்களும்(உண்டு).

35. அங்கு அவர்கள் யாதொரு வீண்வார்த்தையையும், (ஒருவரையொருவர்) பொய்யாக்குவதையும்செவியுறமாட்டார்கள்.

36. (இவை) உமது இரட்சகனிடமிருந்து நற்கூலியாக, கணக்கான அன்பளிப்பாக(கொடுக்கப் பட்டுள்ளது).

37.(அவனே) வானங்கள் மற்றும் பூமி இன்னும் இவை இரண்டிற்கு மத்தியிலுள்ளவற்றிற்கும் இரட்சகன்; (அவனே) அளவற்ற அருளாளன்; அவன்முன் அவர்கள் பேச சக்தி பெறமாட்டார்கள்.

38. (ஜிப்ரீலாகிய) ரூஹூம், மலக்குகளும் அணிவகுத்து நிற்கும் நாளில் (மிகக் கிருபையுடையவனாகிய) அர்ரஹ்மான் எவருக்கு அனுமதியளித்து_ இன்னும் சரியானதைக் கூறியிருந்தாரோ அவரைத்தவிர (மற்றெவரும் அவன் முன்) பேசமாட்டார்கள்.

39. (அந்நிகழ்ச்சிகள் நடந்தேறும்) அது சத்தியமான நாளாகும்; எனவே, எவர் நாடுகிறாரோ அவர் தம் இரட்சகனிடம் மீளும்பாதையை எடுத்துக்கொள்வாராக.

40. நிச்சயமாக, சமீபித்துவரும் வேதனையைப் பற்றி நாம் உங்களுக்கு எச்சரிக்கிறோம்; (விசுவாசியான) மனிதர் தன் இருகரங்கள் முற்படுத்தியதைக் (கண்கூடாகக்) காணும் நாள்; இன்னும் நிராகரித்தவனோ (அந்நாளில்) "நான் மண்ணாக ஆகியிருக்கவேண்டுமே!" என்று கூறுவான்.

---

அத்தியாயம் : 79

## அந்நாஜிஆத் _ பறிப்பவர்கள்

வசனங்கள் : 46 மக்கீ ருகூஉகள் : 2

---

### அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்வின் பெயரால் ( ஓதுகிறேன்).

1 (பாவிகளின்உயிர்களை) பலமாகப் பறிப்பவர்(களான மலக்கு)கள்மீது சத்தியமாக_

2. (நல்லோரின் ஆத்மாவை எளிதாகக்) கைப்பற்றுபவர்(களான மலக்கு)கள்மீது சத்தியமாக_

3. அதிவேகமாக நீந்திச் செல்பவர்(களான மலக்கு)களின் மீது சத்தியமாக_

4. (கைப்பற்றிய நல்லோர்களின் உயிர்களை அல்லாஹ்வின் சன்னிதிக்கு எடுத்துச் செல்லப்) போட்டி போட்டுக்கொண்டு முந்திச் செல்வோர்(களான மலக்கு)கள்மீதும் சத்தியமாக_

5. சகல காரியங்களையும் (அல்லாஹ்வின் கட்டளைப்படி) நிர்வகிப்பவர் (களான மலக்கு)கள் மீதும் சத்தியமாக_

6 . (முதல் முறை குழல் ஊதப்பட்டபின் பூமியை) கடுமையாக நடுக்கக் கூடியது நடுக்கும் நாளில்_

7. அதனை அடுத்துவரக்கூடியது (இரண்டாவது முறை குழல் ஊதுவது) தொடரும்.

8. அந்நாளில் இதயங்கள் (திடுக்கிட்டு) கலக்கமுடையவையாக இருக்கும்.